

கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்களை தூத்துக்குடியில் அண்மையில் கடலுக்குச் சென்ற தூத்துக்குடி மாவட்டம் தருவைகுளத்தைச் சேர்ந்த 26 மீனவர்கள், தவறுதலாகக் கடல் எல்லையைத் தாண்டி மாலத்தீவுப் பகுதியில் சிக்கியுள்ளனர். அவர்களைப் பாதுகாப்பாக மீட்டு தாயகம் அழைத்து வர உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி, தருவைகுளம் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் சந்தித்துக் கோரிக்கை விடுத்தனர்.

ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ.41–க்கு வாங்குவதற்கு கடும் கண்டனம்!

த.வெ.க. சர்க்கஸ் கும்பலின் ஆட்டத்திற்கு பொதுமக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் 'எக்ஸ்' தளத்தில் பதிவு!

சென்னை, அக்.29-

த.வெ.க. அரசு ஒரு யூனிட் மின்சாரத்தை ரூபாய் 41-க்கு வாங்கவுள்ளதற்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். மேலும் இந்த சர்க்கஸ் கும்பலின் ஆட்டத்திற்கு பொதுமக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் எக்ஸ் தளப் பதிவு வருமாறு:-

Cheap CMஇன் சீழ்பிடித்த ஆட்சியில், வரலாற்றில் இல்லாத அளவுக்கு ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ.35க்கு வாங்குவது போதாது என்று அடுத்தக்கட்டமாக ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ.41 கொடுத்து வாங்கவுள்ளதற்கு எனது கடும் கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இதற்காகத்தான், இரண்டு நாட்களுக்கு முன்பு, அரை டவுசர்கள் முதல் Online Abusers வரை, ராஜஸ்தானில் ஏதோ ஒரு இடத்தில் மின் உற்பத்திக்கு ஆகும் செலவை, கொள்முதல் விலை என்று உருட்டிக்கொண்டிருந்தார்களா?

நடத்துவது ஆட்சியும் இல்லை செய்வது நிர்வாகமும் இல்லை ஆனால், இவ்வளவு Confidentஆக நானும் முதலமைச்சர் என்று வலம் வரும் #DUMMY_CM, கூடுதல் விலைக்கு மின்சாரம் வாங்கி, அதற்கான செலவை மின்கட்டணம் என்ற பெயரில் மக்கள் தலையில் கட்டப்போகும் கொடுமைக்குப் பெயர் தான் மாற்றமா?

இவர்களின் கையாலாகாத் தனத்தால் விலைவாசி உயர்வில் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கும் போது, பண்டிகை நேரம் பார்த்து ஆவின் பால் பொருட்களின் விலையையும் ஏற்றி இருக்கிறார்கள்.

இப்படி இடைவிடாமல் மக்கள் வயிற்றில் அடித்து, தமிழ்நாட்டை Reverse Gear போட்டுப் பின்னுக்கு இழுத்துச் செல்லும் இந்த சர்க்கஸ் கும்பலின் ஆட்டத்திற்கு மக்களே தக்கப்பாடம் புகட்டுவார்கள்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

தி.மு.க. ஆட்சியில் கட்டி முடிக்கப்பட்ட திட்டங்களை

த.வெ.க. ஆட்சியில் கட்டியதைப் போல் 'ரீல்ஸ்' போடுகிறார்கள்!

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. பேட்டி!

தூத்துக்குடி, அக். 29-

தற்போதைய த.வெ.க. அரசு தி.மு.க. ஆட்சியில் கட்டி முடிக்கப்பட்ட திட்டங்களை, தாங்கள் கட்டியதுபோல் ரீல்ஸ் போட்டு திறந்து வைக்கிறது என்று கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கூறியுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் மஞ்சள் நீர்க் காயலில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி ராஜாத்தி கருணாநிதி செய்தியாளர் களை சந்தித்தார். அப்போது அவர் கூறி யதாவது:-

தற்போது திருச்செந்தூருக்கு நாளொன்றுக்கு 1.1 MLD குடிநீர் மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், திருச் செந்தூர் கோயிலுக்கு வருகை தரும் பக் தர்களின் எண்ணிக்கை மற்றும் அப்ப குதி மக்கள்தொகை அதிகரித்துள்ளதால், நாளொன்றுக்கு 3.8 MLD க்கும் அதிக மான குடிநீர் தேவைப்படுகிறது. இத னால், திருச்செந்தூரின் குடிநீர்த் தேவை யைப் பூர்த்தி செய்யும் வகையில் கூடுதல் தண்ணீர் கொண்டுவர வேண் டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

முன்னதாக மஞ்சள் நீர்க்காயலில் இருந்து ஆத்தூர் வழியாகத் திருச் செந்தூருக்குத் தண்ணீர் கொண்டுவ ரும் திட்டத்திற்குக் கடந்த திமுக ஆட்சி யின்போதே ரூ.9.36 கோடி நிதி ஒதுக் கீடு செய்யப்பட்டது. இதன் மூலம் ஆத்தூர் வரை தண்ணீர் கொண்டுவரு வதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன. இருப்பினும், அங்கிருந்து திருச் செந்தூருக்குத் தண்ணீர் கொண்டுவரு வதற்குத் தற்போதுள்ள குழாய்களின் கொள்ளளவு போதுமானதாக இல்லை. இதனால், பல்வேறு இடங்களில் குழாய் உடைப்புகளும் நீர்க் கசிவுகளும் ஏற்ப டுகின்றன. எனவே, சுமார் 15 கி.மீ. நீள முள்ள குழாய்களைச் சீரமைப்பதற்கும், தொட்டியைப் புனரமைப்பதற்கும் ரூ.30 கோடி மதிப்பிலான புதிய திட்ட முன்மொழிவு அரசிடம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.



மக்கள் பாதிப்பு!

இந்த முன்மொழிவை அரசு ஏற்று, விரைந்து நிதி ஒதுக்கீடு செய்து பணி களை நிறைவேற்றினால் மட்டுமே திருச்செந்தூருக்குத் தேவையான அளவு குடிநீரை வழங்க முடியும். மக்க ளின் தேவையை கருத்தில் கொண்டு தற்போதைய அரசு உடனடியாக நடவ டிக்கை எடுக்க வேண்டும். இல்லையெ னில், பொதுமக்களும் கோயிலுக்கு வரும் பக்தர்களும் தொடர்ந்து குடிநீர்த் தட்டுப்பாட்டால் பாதிக்கப்படும் நிலை ஏற் படும்.

அதேபோல், மாலத்தீவில் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிப்பது தொடர்பாக ஒன்றிய அரசிட மும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடமும் பேசினேன். அங்குள்ள மீனவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், பட குகளுக்கு விதிக்கப்பட்ட அபராதத்தைக் குறைப்பதற்கான முயற்சி களும் நடை பெற்று வருகிறது.

பொறுப்பற்ற காவல்துறை!

தூத்துக்குடி மாவட்டத்தில் தொடர்ந்து நடைபெறும் குற்றச் சம்பவங்கள் குறித் தும் அதனை சுட்டிக்காட்டுவதும் மக்கள் பிரதிநிதிகளின் கடமை. அவற்றைத் தடுக்க உரிய நடவடிக்கைகளை மேற் கொள்வதே காவல்துறையின் பொறுப்பு. ஆனால் குற்றச் சம்பவங்களைத் தடுப்ப தில் கவனம் செலுத்த வேண்டிய காவல் துறை, அரசியல் விமர்சனங்களுக்குப் பதிலளிப்பதில் நேரத்தைச் செலவிடுவது வியப்பளிப்ப தாக உள்ளது.

இதுமட்டுமின்றி, தவெக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு 50க்கும் மேற்பட்ட கைதிகள் சிறைகளிலிருந்து தப்பியோடி யுள்ளனர். பல்வேறு குற்றச் சம்பவங்க ளில் தவெக நிர்வாகிகளும் ஈடுபட்டுள்ள னர். ஆனால் தவெக அரசு எதிர்க்கட்சி யினரைக் கைது செய்வதில் காட்டப்ப டும் ஆர்வத்தை, குற்றச் செயல்களில் ஈடுபடுவோரைக் கைது செய்வதில் காட் டப்படுவதில்லை.

குற்றச்சம்பவங்கள் மவுனம் காக்கும் முதல்வர்!

முதலமைச்சர் தொடர்ந்து தமிழ்நாட் டில் நடைபெறும் குற்றச் சம்பவங்கள் குறித்து மௌனம் காக்கிறார். முதல மைச்சர் விஜய் பஞ்ச் வசனங்களைப் பேசுவதற்கு மட்டுமே வாய் திறக்கிறார். சட்டமன்றத்திலும் பிற நேரங்களிலும் உரிய விளக்கங்களை அளிப்பதில்லை. மேலும், பத்திரிகையாளர்களைச் சந் தித்து கேள்விகளுக்குப் பதிலளிக்காத முதலமைச்சராக இருக்கிறார்.

தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் தற்போது திறந்து வைக்கப்படும் பல் வேறு கட்டிடங்கள் மற்றும் திட்டங்கள், திமுக ஆட்சிக்காலத்தில் கட்டி முடிக்கப் பட்டவையாகும். ஆனால், அவை தி.மு.க. ஆட்சியில் கட்டிமுடிக்கப்பட்டவை என்பதைக்கூட குறிப்பிடாமல், தற்போ தைய அரசு ஆட்சிப் பொறுப்பேற்று நான்கு மாதங்களிலேயே இத்திட்டங்க ளைக் கட்டி முடித்ததைப் போன்ற ஒரு பிம்பத்தை உருவாக்கி, ரீல்ஸ்கள் வெளி யிட்டு அவற்றைத் திறந்து வைத்து வரு கின்றனர்.

இவ்வாறு கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. பேட்டியளித்தார்.

ஒருங்கிணைந்த கடலூர் மாவட்ட தி.மு.க. சார்பில்

மகளிர் அணி, மகளிர் தொண்டரணி ஆர்ப்பாட்டம்!

கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

கடலூர், அக்.29-

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. விடுத் துள்ள வேண்டுகோள் வருமாறு:-

கழகத் தலைவர் அவர்க ளின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர், கழக இளைஞர் அணி செயலா ளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுத லின்படி, தி.மு.க. நாடாளு மன்றக் குழு தலைவர், கழக துணைப் பொதுச்செயலா ளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி., அறிவு றுத்தலின்படி, வருகின்ற 31.10.2026 சனிக்கிழமை, காலை 10.00 மணியளவில், கடலூர் மஞ்சக்குப்பம் தலைமை தபால் நிலையம் அருகில், கடலூர் மாநகர மேயர் திருமதி.சுந்தரி ராஜா தலைமையில், கடலூர் கிழக்கு மாவட்ட திமுக மக ளிர் அணி அமைப்பாளர் திருமதி.த.அமுத ராணி, கட லூர் கிழக்கு மாவட்ட திமுக மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் திருமதி. ப. மனோ ரஞ்சிதம் கடலூர் கிழக்கு மாவட்ட துணை செயலாளர் திருமதி.சுதாசம் பத், பொதுக்குழு உறுப்பி னர் திருமதி. ர.மஞ்சு, கட லூர் மேற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திருமதி.ஜெயந்தி நடரா ஜன், கடலூர் மேற்கு மாவட்ட மகளிர் தொண் டர் அணி அமைப்பாளர் திருமதி.இந்துமதி மனோக ரன், கடலூர் மேற்கு மாவட்ட துணை செயலா ளர் வழக்கறிஞர் திருமதி. ஆனந்தி சரவணன், பொதுக் குழு உறுப்பினர் திருமதி. செந்தமிழ்செல்வி கருப்பு சாமி ஆகியோர் மற்றும் மாவட்ட மகளிர், மகளிர் தொண்டர் அணி தலைவர் கள், துணை தலை வர்கள், மாவட்ட துணை அமைப் பாளர்கள் முன்னிலையில், பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழ்நாட்டை படுகுழியில் தள்ளி உள்ள த.வெ.க அரசைக் கண்டித்து மாபெ ரும் கண்டன ஆர்ப்பாட் டம் நடைபெற உள்ளது.



இந்த ஆர்ப்பாட்டத்தில் கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர், கட லூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் சி. வெ.கணேசன் எம்.எல்.ஏ., கண்டன உரையாற்ற உள்ள னர்.

அது சமயம் ஆர்பாட்டத் தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், முன்னாள், இந் நாள் சட்டமன்ற, நாடாளு மன்ற உறுப்பினர்கள், மாந கர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர் கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட - மாநகர - ஒன் றிய - நகர - பகுதி - பேரூர் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி தலைவர் கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக மக ளிர் துணை செயலாளர்கள், முன்னாள் இந்நாள் மகளிர் உள்ளாட்சி பிரதிநிதிகள், மகளிர் மாநகர மேயர், பேரூராட்சி மன்ற தலைவர் கள், துணை தலைவர்கள், மண்டல குழு தலைவர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற மகளிர் உறுப்பினர்கள், முன்னாள் ஒன்றிய குழு தலைவர்கள், துணை தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர் கள், துணை தலைவர்கள், மாவட்ட ஒன்றிய குழு உறுப்பினர்கள் மற்றும் கழக மகளிர் அணியினர், மகளிர் தொண்டர் அணியினர், மக ளிர் அணி உறுப்பினர்கள், கழக சார்பு அணிகளின் நிர் வாகிகள், தோழர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட் டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கை யில் தெரிவித்துள்ளார்.



திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி சார்பில் நடைபெறவுள்ள கண்டன ஆர்ப்பாட்டம் குறித்த ஆலோசனைக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும், கழக கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார். உடன் வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன் எம்.பி., இரா.ஸ்ரீதரன், எஸ்.அம்பேத்குமார்,எம்.எல்.ஏ., மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், ஓ.ஜோதி, பார்வதி சீனுவாசன், மேயர் நிர்மலா வேல்மாறன், விஜயலட்சுமி ரமேஷ் உட்பட பலர் உள்ளனர்.

சட்டம் ஒழுங்குச் சீர்கேடு - பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பின்மை - விலைவாசி உயர்வைக் கண்டித்து

தி.மு.க. மகளிர் அணி சார்பில் மாவட்டத் தலைநகரங்களில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தை கழக மகளிர் மகத்தான வெற்றி பெறச் செய்வோம் வாரீர்!

கழக மகளிர் - மகளிர் தொண்டர் அணியினருக்கு அணியின் செயலாளர்கள் ஹெலன் டேவிட்சன் - நாமக்கல் ப.இராணி வேண்டுகோள்!

சென்னை, அக்.29–

தமிழ்நாட்டில் நிலவும் சட்டம்–ஒழுங்கு சீர்கேடு, பெண் குழந்தைகளுக்குப் பாதுகாப் பற்ற சூழல் மற்றும் விண்ணைத் தொடும் விலை வாசி உயர்வை கண்டித்து தி.மு.க. கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி 31.10.2026, சனிக்கிழமை அன்று நடைபெ றும் தி.மு.க. மகளிர் அணியின் கண்டன ஆர்ப்பாட்டத்தை மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் மாவட்டச் செயலாளர்களோடு ஆலோசனை செய்து சிறப்பாக ஏற்பாடு செய்து வெற்றி பெறச் செய்வீர்! என மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட் சன், மகளிர் தொண்டரணி செயலாளர், நாமக்கல் ப. இராணி ஆகியோர் விடுத் துள்ள அறிக்கையில் வேண்டு கோள் விடுத்துள்ளார்கள்.

அவர்களின் அறிக்கை வருமாறு:-

தமிழகத்தின் அமைதிப் பூங்கா இன்று குற்றவாளி களின் புகலிடமாக மாற்றப்பட் டுள்ளது. அன்றாடம் செய்தித் தாள்களைத் திறந்தால் கொலை, கொள்ளை, வழிப்பறி மற்றும் போதைப் பொருட்களின் நடமாட்டம் குறித்த செய்திகளே ஆக்கிர மித்துள்ளன. காவல் துறை யின் கைகள் கட்டப்பட்டு, சட் டம்-ஒழுங்கு முற்றிலுமாக முடங்கிக் கிடக்கிறது. பொது மக்களின் உயிருக்கும் உடை மைக்கும் எவ்வித உத்தரவா தமும் இல்லாத அவல நிலை இன்று தமிழகத்தில் நிலவு கிறது.





"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்" போற்றப்பட வேண்டிய இந்த மண்ணில், இன்று நமது பெண் குழந்தை களும், பெண்களும் வீட்டை விட்டு வெளியே சென்று பாது காப்பாக வீடு திரும்புவது பெரும் சவாலாக மாறியுள் ளது. பள்ளிக் குழந்தைகள் முதல் பணிக்குச் செல்லும் பெண்கள் வரை சமூக விரோ திகளால் தொடர்ந்து அச்சுறுத் தலுக்கு உள்ளாக்கப்படுகிறார் கள். பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மீதான அரசின் அலட்சியப் போக்கும், குற்ற வாளிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கத் தவறிய நிர்வாகத் திறமையின்மை யுமே இந்த பாதுகாப்பற்ற சூழ் நிலைக்கு முழுக் காரணமா கும். ஒருபுறம் பாதுகாப்பற்ற சூழல் என்றால், மறுபுறம் ஏழை எளிய மக்களின் வாழ் வாதாரத்தை நசுக்கும் விலை வாசி உயர்வு. அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய், காய்க றிகள் உள்ளிட்ட அத்தியாவசி யப் பொருட்களின் விலை யும், சிலிண்டர், பெட்ரோல், டீசல் விலைகளும் நாளுக்கு நாள் விண்ணைத் தொட்டு வருகின்றன. குடும்பத்தை வழிநடத்தும் இல்லத்தரசிகள் ஒவ்வொரு நாளும் பெரும் பொரு ளாதார நெருக்கடி யைச் சந்தித்து, தங்களது வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கின்றனர். இந்த விலை வாசி உயர்வைக் கட்டுப்ப டுத்த அரசு எவ்வித ஆக்கப்பூர் வமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

நமது உரிமைகளை மீட் டெடுக்கவும், தமிழகப் பெண் களின் பாதுகாப்பிற்கு அர ணாக நிற்கவும், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படியும், மகளிர் அணி பொறுப் பாளர் கழக துணை பொது செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி அவர் கள் ஆலோசனைப்படியும் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தை மாவட்ட மக ளிர் அணி, மகளிர் தொண்ட ரணி நிர்வாகிகள் மாவட்ட செயலாளர்களோடு ஆலோ சனை செய்து சிறப்பாக ஏற் பாடு செய்து வெற்றி பெற செய் வீர்!

இவ்வாறு மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட் சன், மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி ஆகியோர் வேண் டுகோள் விடுத்துள்ளனர்.